No. of Printed Pages : 7

**4801**

பதிவு எண் | | | | | | |

# தமிழ் - முதல் தாள்
# Language – Part A – TAMIL – Paper I

(செய்யுள், உரைநடை)

நேரம் : 2½ மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 100

அறிவுரை : (1) அனைத்து வினாக்களும் சரியாக அச்சுப் பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாக தெரிவிக்கவும்.

(2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்குப் பயன்படுத்த வேண்டும்.

குறிப்பு - (i) விடைகள் தெளிவாகவும் குறித்த அளவினதாகவும், சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

(ii) வினா எண் 49 -விடை மட்டும் செய்யுள் வடிவில் அமைதல் வேண்டும்.

## பிரிவு - I
(மதிப்பெண்கள் : 20)

### பகுதி - 1

I. உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 6x1=6

1. திருக்குறள் _________ வெண்பாக்களால் ஆன நூலாகும்.
(அ) சிந்தியல் (ஆ) குறள் (இ) நேரிசை

2. குடும்பவிளக்கு _________ படைப்புகளுள் ஒன்று.
(அ) பாரதியார் (ஆ) பாரதிதாசன் (இ) சுரதா

3. 'நல்' என்னும் அடைமொழி பெற்ற நூல் _________ .
(அ) அகநானூறு (ஆ) கலித்தொகை (இ) நற்றிணை

[ திருப்புக

4. உலகம் என்னும் தமிழ்ச்சொல் ________ என்னும் சொல்லின் அடியாகப்பிறந்தது.
   (அ) உலகு (ஆ) உலவு (இ) உளது

5. காந்தியடிகள் ________ நாடகத்தைப் பார்த்து உண்மையே பேச வேண்டும் என்று உறுதி பூண்டார்.
   (அ) சிரவணபிதுர்பத்தி (ஆ) அரிச்சந்திரன் (இ) பக்தப் பிரகலாதன்

6. "உலகெலாம் உணர்ந்து ஓதற்கரியவன்" எனத் தொடங்கும் பாடல் இடம் பெற்றுள்ள நூல் ________.
   (அ) கந்தபுராணம் (ஆ) சீறாப்புராணம் (இ) பெரியபுராணம்

பகுதி - 2

II. கோடிட்ட இடத்தை நிரப்புக : 6x1=6

7. போலிப் புலவர்களைத் தலையில் குட்டுபவர் ________.

8. திருநாவுக்கரசர் அருளிய பாடல்கள் ________ என வழங்கப்படுகிறது.

9. நிற்க நேரமில்லை என்ற நூலின் ஆசிரியர் ________.

10. மும்பையில் அம்பேத்கர் சிறிது காலம் ________ பேராசிரியராகப் பணியாற்றினார்.

11. படப்பிடிப்புக் கருவியை ________ பொருத்துவதும் உண்டு.

12. தனக்குவமையில்லா ஒரு ________ தமிழ் இனம்.

பகுதி - 3

III. பொருத்துக : 4x1=4

13. நாவாய் - சிவன்

14. அங்கணர் - மாலை

15. எண்கு - படகு

16. தார் - கரடி

பகுதி - 4

IV. **விடைக்கேற்ற வினா அமைக்க :** **4x1=4**

17. பெண்ணுரிமைக்கு ஊறு விளைவிக்கும் பழைய நம்பிக்கைகளை ஏற்க மறுத்தார் பெரியார்.

18. செய்திப்படங்கள் வாயிலாய் நிகழ்வுகளை நம் இருப்பிடத்திலேயே கண்டு களிக்கலாம்.

19. குமரிக் கண்டத்தில் தோன்றிய முதல் மனிதன் பேசிய மொழி தமிழ்.

20. சொல்லக் கருதும் செய்தியைச் சுவையுடன் சொல்லுதல் வேண்டும்.

பிரிவு - II

(மதிப்பெண்கள் : 20)

பகுதி - 1

V. கீழ்க்காணும் வினாக்களுள் **எவையேனும் ஐந்தினுக்கு மூன்று** வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க. **5x2=10**

21. கொக்கை உவமையாகக் காட்டி வள்ளுவர் விளக்கும் கருத்து யாது?

22. பழியில்லா மன்னனாய் வாழ்பவனின் பண்புகளாகக் கணிமேதாவியார் குறிப்பிடுவன யாவை?

23. கையுறைப் பொருள்களாய்க் குகன் கொண்டு சென்றன எவை? யாருக்கு கொண்டு சென்றான்?

24. அப்பூதியடிகள் எவ்வெவற்றுக்கெல்லாம் திருநாவுக்கரசு எனப்பெயர் வைத்தார்?

25. வயலின் வரப்புகளாகக் கூறப்படுபவை யாவை?

26. கெடுப்பார் இலானும் கெடுபவர் யார்?

27. அறிவு எனப்படுவது யாது?

[ திருப்புக

பகுதி - 2

VI. கீழ்க்காணும் வினாக்களுள் **எவையேனும் ஐந்தினுக்கு மூன்று** வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க. **5x2=10**

28. மொழிக்குரிய செவ்வியல் தன்மைகள் யாவை?

29. கல்விப்படங்களின் வாயிலாக நாம் அறிவன யாவை?

30. பண்டைத் தமிழர்களின் ஏற்றுமதி, இறக்குமதி குறித்துக் கூறும் நூல்கள் யாவை?

31. கண்ணிடந்து அப்பியவர் யார்? அவர் வரலாறு உணர்த்தும் செய்தி யாது?

32. காந்தியடிகளைக் கவர்ந்த குஜராத் பாடலின் கருத்து யாது?

33. இராமலிங்கர் எங்கு, எப்போது பிறந்தார்?

34. பட்டப் படிப்புகள் எவையேனும் நான்கினை எழுதுக.

பிரிவு - III

(மதிப்பெண்கள் : 24)

பகுதி - 1

VII. கீழ்க்காணும் வினாக்களுள் **எவையேனும் மூன்றினுக்கு ஆறு** வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க. **3x4=12**

35. தமிழ்மொழி வளர்ச்சி அடைவதற்குப் பாரதிதாசன் கூறும் வழிவகைகள் யாவை?

36. விருத்த மாதவரை நோக்கி இராமன் கூறியவை யாவை?

37. தலைவனுக்குத் தோழி கூறும் செய்தியினை நற்றிணைப் பாடல்வழி தொகுத்து எழுதுக.

38. புலியின் கொடுஞ்செயல்கள் பற்றி உமறுப்புலவர் கூறுவன ய்ாவை?

39. இளந்திரையன் 'சாதனைப்பூக்கள்' என்று எவற்றைச் சுட்டுகிறார்?

## பகுதி - 2

VIII. கீழ்க்காணும் வினாக்களுள் **எவையேனும் மூன்றினுக்கு ஆறு** வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க. 3x4=12

40. பெண்ணுரிமையை விளக்குக.

41. அம்பேத்கர் பெற்ற கல்வித் தகுதிகள் யாவை?

42. மேடைப்பேச்சின் தொடக்கம் எவ்வாறு அமைதல் வேண்டும்?

43. பண்டைத் தமிழரின் கடல் வாணிகம் குறித்து எழுதுக.

44. மனித நேயம் குறித்துக் காந்தியடிகள் கூறியது யாது?

## பிரிவு - IV

(மதிப்பெண்கள் : 10)

IX. கீழ்க்காணும் பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க. 5x1=5

45. பாத்தனதாக் கொண்டபிள்ளைப் பாண்டியன் வில்லி ஒட்டக்
கூத்தனிவர் கல்லாது கோட்டிகொளும் - சீத்தையரைக்
குட்டிச் செவியறுத்துக் கூட்டித் தலைகளெல்லாம்
வெட்டிக் களைபறிக்க மேலாய்த்தூர் - கட்டி

(i) இப்பாடல் குறிப்பிடும் புலவர்களின் பெயர்களை எழுதுக.

(ii) செவியறுத்து - பிரித்து எழுதுக.

(iii) சீத்தையர் - பொருள் எழுதுக.

(iv) இப்பாடலில் இடம் பெற்றுள்ள அடி எதுகைச் சொற்களை எடுத்தெழுதுக.

(v) இப்பாடல் இடம் பெற்றுள்ள நூல் எது?

[ திருப்புக

46. கீழ்க்காணும் உரைப்பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க. **5x1=5**

கடல் வாணிகத்தில் தமிழர் சிறந்திருந்தனர். பொன்னும், மணியும், முத்தும், துகிலும் கொண்டு கடல் கடந்து வாணிகம் செய்தனர். பண்டைத் தமிழகத்தில் துறைமுகப்பட்டினங்கள் பலவிருந்தன. பூம்புகார் முதலான பெருநகரங்கள் வணிகர் வாழும் இடங்களாய் இருந்தன. கிறித்து பிறப்பதற்கு முன்பே கிரேக்கம், உரோமாபுரி, எகிப்து ஆகிய நாடுகளுக்கு அரிசியும், மயில் தோகையும், சந்தனப் பொருள்களும் தமிழகத்திலிருந்து அனுப்பப்பட்டன. தமிழர்களுக்குச் 'சாவக' நாட்டுடனும் கடல் வாணிகத் தொடர்பு இருந்தது. கி.மு. பத்தாம் நூற்றாண்டில் அரசன் சாலமனுக்கு யானைத்தந்தமும், மயில்தோகையும், வாசனைப் பொருட்களும் தமிழகத்திலிருந்து அனுப்பப்பட்டன.

வினாக்கள் :-

(i) கடல் வாணிகத்தில் சிறந்திருந்தவர் யார்?

(ii) கடல் கடந்து வாணிகம் செய்த பொருள்கள் யாவை?

(iii) கிறித்து பிறப்பதற்கு முன் எந்தெந்த நாடுகளுடன் தமிழர்கள் வாணிகம் செய்தனர்?

(iv) அரசன் சாலமனுக்குத் தமிழகத்திலிருந்து அனுப்பப்பட்ட பொருள்கள் யாவை?

(v) இவ்வுரைப் பகுதிக்குப் பொருத்தமான தலைப்பினை எழுதுக.

## பிரிவு - V

(மதிப்பெண்கள் : 26)

### பகுதி - 1

X. கீழ்க்காணும் வினாக்களுக்குப் **பத்து வரிகளுக்கு** மிகாமல் விடையளிக்க. **2x8=16**

47. (அ) ஒழுக்கமுடைமை பற்றி வள்ளுவர் கூறும் கருத்துகளைத் தொகுத்தெழுதுக.

அல்லது

(ஆ) வாழ்க்கையில் அனைவரும் பின்பற்ற வேண்டிய நெறிமுறைகள் பற்றிக் கலித்தொகைப் பாடல் கூறுவனவற்றைத் தொகுத்தெழுதுக.

48. (அ) திரைப்படம் எடுத்தலுக்குத் தேவையான ஆயத்தப் பணிகளைத் தொகுத்தெழுதுக.

அல்லது

(ஆ) தமிழன் அறிவியலின் முன்னோடி என்பதனை விளக்குக.

பகுதி - 2

49. செய்யுள் வடிவில் விடை தருக. 2+2+6=10

(அ) நன்றிக்கு - எனத் தொடங்கும் குறள்.

(ஆ) வினை - என முடியும் குறள்.

(இ) வாயிற் கடைமணி - எனத் தொடங்கும் சிலப்பதிகாரப் பாடல்.

- o 0 o -